## தலைப்பு 288 - நில அளவைத் திணைக்களம் - 2024

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 288 - நில அளவைத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நில அளவைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நில அளவைத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்ததமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையயை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நில அளவைத் திணைக்களத்தினால் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது நில அளவைத் திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் இல ங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் ரோகவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செலவுகளை நிகழ்ச்சித்திட்டமாக்கும் போது அங்கீகரிக்கப்படுகின்ற நிதிகள் நிதி ஆண்டிற்குள் அடைந்துகொள்ளக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது என சான்றுபடுத்துதல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உன்ள போதிலும் 2024 வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதி எற்பாடு வழங்கப்பட்டிருந்த 288-2-2-2509 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் ரூபா 194,800,000 நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் 06 மீண்டுவரும் செலவு விடயங்கள் தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில மொத்தமாக ரூபா 16,674,273 சேமிக்கப்பட்டிருந்தது. அது தேறிய நிதி ஏற்பாட்டில் 60 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்யாது நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்ததன் காரணமாக ஏனைய ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்காக | 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் மூலம் 288-2-2509 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் ரூபா 194,800,000 நிதி ஏற்பாடு ஒருங்கிணைந்த காணித் தகவல் முறைமையைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டிருந்தும் வெளிநாட்டு கடன் நிதி அங்கீகரிக்கப்படாததன் காரணமாக அந்த நிதி ஏற்பாட்டினை செலவு செய்வதற்கு முடியாதிருந்தது. 06 மீண்டுவரும் செலவு விடயங்களின் சேமிப்பாக வெளிநாட்டு பயணங்கள் மற்றும் கல்வியை நிறுத்துதல், பெரிய அளவு பராமரிப்பு நடவடிக்கைகளின் காரணமாக சிறிய செலவு தேவைப்பாடு உருவாகியிருக்காமை, மொழித்தேர்ச்சி படிகள் கிடைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் | ஆண்டிற்குள் அடைந்து கொள்ளக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மட்டுப்படுத்தி நிதி ஏற்பாட்டினை வேண்டிக் கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இப்பணத்தை ஒதுக்கீடு செய்வதற்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. | பெற்று சென்றுள்ளமை, ACRS நிகழ்ச்சித்திட்டத்தின் உபசரிப்பு செலவினை மேற்கொண்டதன் காரணமாக அதற்காக பங்களிப்பு பண கொடுப்பனவு தேவையற்றிருந்தமை, எதர்பார்த்தவாறு இயந்திரங்களை திருத்தம் செய்யும் தேவைப்பாடுகள் உருவாகியிருக்காமை, சுத்திகரிப்பு செய்யும் நடவடிக்கைகள் திணைக்கள ஊழியர்களை ஈடுபடுத்தி நிறைவேற்றியமை என்பவற்றின் காரணமாக நிதி எற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |

**3.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்துதல் செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (1) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்படுகின்ற வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்கப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் 12 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்காக 28 கணக்காய்வு ஐய வினாக்கள் கிடைத்து தற்பொழுது அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்கப்பட்டுள்ளது. திணைக்களத்தில் காணப்படுகின்ற நிறுவக கட்டமைப்பின் பிரகாரம் தலைமை அலுவலகத்திற்கு ஒரு கடிதம் பெற்றுக்கொள்ளப்படுவதாயின் பிராந்திய அலுவலகம், மாவட்ட அலுவலகம், மாகாண அலுவலகம் என்பவற்றினூடாக தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதிலைக் கோரும் போது தலைமை அலுவலகத்திலிருந்து மாகாண அலுவலகத்திற்கும் மாகாண அலுவலகத்திலிருந்து மாவட்ட அலுவலகத்திற்கும் மாவட்ட அலுவலகத்திலிருந்து பிராந்திய அலுவலகத்திற்குமாக தொடர்புபடுத்தப்பட | நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்குவதற்கு முடியுமான வகையில் பொருத்தமான உள்ளக வேலைத் திட்டத்தினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

வேண்டியதுடன் மீண்டும் பதிலை பெற்றுக்கொள்ளும் போது அந்த முறையிலேயே பதிலை பெற்றுக்கொள்ள வேண்டும். இக்காரணத்தினால் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலை வழங்குதல் தாமதமடைந்துள்ளது.

**3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி**<br>**ரூபா** | **இணக்கமின்மை** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) நி.பி 104(3) மற்றும் நி.பி 104 (4) | | முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஏழு நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுமாயின் தொடக்க அறிக்கையினை உடனடியாக அனுப்ப வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு 03 சந்தர்ப்பங்களின் போது 77 நாட்களுக்கும் 55 நாட்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சு எடுத்திருந்தது. விசாரணையின் பின்னர் நட்டம் ஏற்பட்ட (இல்லையாயின் அது பற்றி தெரிந்துகொண்ட) | திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினை தவிர்த்து 09 மாகாண அலுவலகங்கள், 25 மாவட்ட அலுவலகங்கள், 89 பிராந்திய அலவகலங்கள் என்பனவாகவும் அதற்கு மேலதிகமாக தியதலாவ நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனமாகவும் தாபனப்படுத்தப் பட்டிருந்தது. அதற்கிணங்க வெளிக்களம் முழுவதும் பரந்துள்ள கடமைச் செயற்பாடுகளை உள்ளடக்கி வெளிக்கள கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது. இதன் போது பல சந்தர்பபங்களில் ஏதாவது விடயத்தை காரணமாகக் கொண்டு வாகனங்களுக்கு | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க உரிய அறிக்கையை வழங்கக்கூடிய வகையில் பொருத்தமான உள்ளக வேலைத் திட்டத்தினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என காட்டப்பட்டிருந்தும் அந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 03 சந்தர்ப்பங்களின் போது 158 நாட்களுக்கும் 87 நாட்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சு எடுத்திருந்தது. | விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும். அவ்வாறே திணைக்களத்தின் ஒரு வாகம் விபத்திற்கு உள்ளாகுகையில் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் செயற்பாடு தலைமை அலுவலகத்தினூடாக மேற்கொள்ளப்படும் போது கால தாமதம் ஏற்படுகின்றது எனவும் அவற்றை குறைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ii) | நி.பி 395(ஏ) | வங்கி கணக்கிணக்க கூற்றினை தயாரிக்க வேண்டியதானது சேகரிக்கப்படுகின்ற பணத்தை வங்கியில் வைப்புச் செய்தல், காசேலைகள் எழுதுதல், அல்லது காசோட்டை பேணுதல் என்பது பற்றி எந்த தொடர்பும் இல்லாத உத்தியோகத்தரினால் என்ற போதிலும் குருனாகல் மாவட்ட நில அளைவ அலுவலகத்தில் காசேட்டை பேணுதல், அனைத்து காசோலைகளையும் எழுதுதல், தபாலில் இடுதல், அனைத்து கொடுப்பனவுகளுக்குமுரிய ஆவணங்களைப் பேணுதல், வருமான மதிப்பீட்டினைத் தயாரித்தல், வங்கி கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரித்தல் என்பன ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தரின் | தற்பொழுது நாளாந்தம் கிடைக்கின்ற பணத்தை வங்கியில் வைப்புச் செய்தலானது கைத்தொழில் மற்றும் நிருவாக உத்தியோத்தரினாலாகும். கணக்காய்வு ஐய வினாவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு இதற்குப் பின்னர் வங்கி கணக்கிணக்க கூற்றினைத் தயாரித்தலினை மற்றுமொரு உத்தியோகத்தருக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தின் கீழ் 05 பிராந்திய நில அளவையாளர் அலுவலகங்கள் செயற்படுவதுடன் கடமைகள் அதிக அளவிலான பெரிய மாவட்டம் என்பதனால் தற்பொழுது இருக்கின்ற அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அதிக அளவான வேலைகளை நிறைவேற்றுவதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு ஐய | நிதிப் பிரமாணங்களுக்கு பொருத்தமாக உள்கக் கட்டுப்பாட்டு வேலைப் பகிர்தலினைச் செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மூலம் மேற்கொள்ளப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் அங்கீகரித்த பதவி அளவிற்கு மிகையாக அப்பதவி வகிக்கின்ற 04 உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றார்கள் என அவதானிக்கப்பட்டது. | வினாவில் அங்கீகரித்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை விட மிகையாக 04 உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றார்கள் என தெரிவிக்கப்பட்டிருந்தும் குருனாகல் மாவட்டத்தலீ 22 பிரதேச செயலகங்களை உள்ளடக்கியிருப்பதனால் அது தொடர்பான காணிகள் சம்பந்தமாக ஆவணங்களை செயற்படுத்துவதற்காக அங்கீகரித்த எண்ணிக்கை போதியதாக இல்லை என அவதானிக்கப்பட்டுள்ளதனால் எதிர்காலத்தில் அலுவலகங்களின் செயற்பாடுகளுக்காக தேவையான ஆளணியினரை மீண்டும் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 2009 ஏப்ரல் 06 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | உள்ளகக் கட்டுப்பாட்டினைப் பேணுவதற்காக வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேட்டினைப் பேணி அனைத்து வருகைகளும் வெளிச்செல்லல்களும் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் பிபில பிராந்திய நில அளவையாளர் அலுவலகத்தில் நில அளவை வெளிக்கள உதவியாளர்கள் அல்லாது ஏனைய உத்தியோகத்தர்கள் அந்த பெயர் பதிவேட்டின் வரிகளை வெற்றிடமாக வைத்து முறையற்ற | இந்த விடயம் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் பரீட்சிக்கப்பட்டதுடன் அதற்குப் பின்னர் அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுமாறு நில அளவை அத்தியட்சகருக்கு கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளக்கு இணங்க வருகைப் பதிவேட்டினை சரியாக பேணுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வகையில் கையொப்பம் இட்டிருந்தார்கள். | | |
| (இ) | அரசாங்க நிதி சுற்றறிக்கை 2020-08-28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் மூலம் திருத்திய நி.பி113(6)(ஆ) மற்றும் அதில் காட்டப்படுகின்ற வழிகாட்டிக் கோவை | 387,217 | பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை செலுத்தி முவடைவதற்கு முன்னர் சேவையை கைவிட்டுச் செல்லல் மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்தலுக்கு உட்படுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவைக் கடன் மீதியை தேர்தல்கள் திணைக்களம், வதிவிடம் மற்றும் அவர்களின் சொத்துக்கள் தொடர்பாக உறுதிப்படுத்தலினைப் பெற்று சட்டமா அதிபரின் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் திணைக்கத்திலிருந்து சேவையை கைவிட்டுச் சென்றுள்ள 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 387,217 தொகையை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் அதில் ரூபா 327,216 தொகை 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால வீச்சினைக் கொண்டவைகளாகும். | வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள மற்றும் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை உங்களால் காட்டப்பட்டுள்ளவாறு சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய கடன் மீதியை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க கடன் மீதி அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | நில அளவை திணைக்களத்தின் நில அளவையாளர் நாயகத்தனில் 2024 ஆகஸ்ட் 21 ஆந் திகதி | | இலங்கை நில அளவை வெளிக்கள உதவியாளர் சேவையின் (நில அளவை மேற்பார்வையாளர்களை உள்ளடக்கி) | கே.சீ.எஸ். கமார - காவலாளர் கடமை வெற்றிடமாகுதல். பீ.வீ.ஜே.ரி.பியுமால்- இல்ங்கை நில அளவை உதவியாளர் சங்கத்தின் மாவட்ட முகவராக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட 06/2024 ஆம் இலக்க திணைக்கள முகாமைத்துவ சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தி | இடமாற்றம் - 2025 சம்பந்தமாக ஒரே சேவை நிலையத்தில் 05 ஆண்டுகள் தொடர்ச்சியாக சேவைக் காலத்தை பூரணப்படுத்திய ஊழியர்கள் கண்டிப்பாக இடமாற்றத்திற்கு உட்படுவார்கள் எனக் காட்டப்பட்டிருந்தும் பத்தேகம பிராந்திய நில அளவை அலுவலகத்தில் இலங்கை நில அளவை வெளிக்கள உதவியாளர் சேவையிலுள்ள ஒரு நபர் 10 ஆண்டுகள் காலமாக அந்த அலுவலகத்திலும் எல்பிடிய பிராந்திய நில அளவை அலுவலகத்திலுள்ள 05 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளுக்கும் 07 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் மற்றும் ஒரு நபர் 30 ஆண்டுகள் காலம் அந்த பிராந்திய அலவலகத்திலும், உடுகம பிராந்திய நில அளவை அலுவலகத்தின் 08 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளுக்கும் 09 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் அதே அலுவலகத்திலும் சேவையாற்றியிருந்தனர். | செயற்படல் மற்றும் தாயின் சுகயீன நிலைமை கே.எம்.ஜீ.திலகரத்ன- 2001 இலிருந்து 2016 வரை பயிற்சி நில அளவை உதவியாளர் சங்கத்தின் முகவராக செயற்பட்டுள்ளார்.<br><br>A.M அனில்- 2023 ஏப்ரல் மாதத்திலிருந்து நில அளவை மேற்பார்வையாளராக பதவி உயர்வினைப் பெற்றுள்ளார். 2025 நவம்பர் மாதம் ஓய்வுபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | காலி மாவட்ட நில அளவை அலுவலகத்தின் உணவு அறையினை திருத்தம் செய்யும் போது தரைக்கு டயிடேனியம் செய்வதற்காக 12 செலவு விடயங்களின் கீழ் 49.06 சதுர மீற்றருக்கு ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 5,600 வீதம் ரூபா 274,716 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் உரிய வேலை விடயத்தில் உள்ளடக்கப்பட்ட ½ அங்குல கன அளவிற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 05 உட்கூரை மின் விசிறிகளுக்கு ஒன்று ரூபா 30,000 வீதம் ரூபா 150,000 செலுத்துவதற்கு காசோலைகள் எழுதப்பட்டிருந்தும் 04 சுவர் மின்விசிறிகளே பொருத்தப்பட்டிருந்தது எனவும் 2025 சனவரி 30 ஆந் திகதிய பௌதீக கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | உணவு அறையினை திருத்தம் செய்யும் போது தரைக்கு டயிடேனியம் செய்தலானது நிர்ணயிக்கப்பட்ட நியமத்திற்கு மேற்கொள்ளப்படவில்லை என்பதனால் தொழில் நுட்ப உத்தியோகத்தரினால் பரீட்சித்துப் பார்த்து மீண்டும் டயிடேனியம் செய்யப்பட்டதுடன் அது 2025-02-10 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டது. அளவீட்டு பத்திரத்திற்கு இணங்க 05 உட்கூரை மின் விசிறிகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் உரிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் அந்த இடத்திற்கு மிகவும் பொருத்தமானது சுவர் மின்விசிறி என்பதனால் அந்த வேலை விடயத்தினை மேலதிக வேலையின் கீழ் 04 சுவர் மின்விசிறிகள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதற்காக விலைப்பட்டியலுக்கு இணங்க ரூபா 99,824 செலவு செய்யப்பட்டது. அது தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதனால் விலைப்பட்டியலுக்கு இணங்க கொடுப்பனவு செய்யப்பட்டது. இந்த வகையில் அளவீட்டுப் பத்திரத்திலுள்ள வேலை விடயங்களை மாற்றம் செய்யும் போது முறைப்படியாக அங்கீகாரத்தினைப் பெற்று எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | அளவீட்டு பத்திரத்திலுள்ள வேலை விடயங்களை மாற்றம் செய்யும் போது முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 4 செய்றபாட்டு மீளாய்வு

### 4.1 தூரநோக்கும் செயற்பணியும்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ‘‘காணித் தகவல்களை வழங்குவதனை எப்போதும் முன்னிலைப்படுத்துதல்’’ என்ற தூர நோக்கினை முன்னறிவிப்பாகக் கொண்டு ‘‘தொழில்சார் திறனுடன் சேவைசார்ந்த நபர்களின் மூலம் தரமான நிலத் தகவல்களை தயாரித்தல் மற்றும் சேவைகளை வழங்குதல்’’ என்பதனை செயற்பணியாகக் கொண்டு திணைக்களத்தின் நில அளவையாளர்கள் எல்லைக்கல் இட்டு காணித் துண்டுகளை அளவீடு செய்தல், நானாவித அளவீடுகள், சுவீகரித்தல் அளவீடுகள, பொறியியல் அளவீடுகள், படம்வரைதல் மற்றும் கட்டுப்பாட்டு அளவீடுகள், நீதிமன்ற அதிகாரப்பத்திர அளவீடுகள், கெடஸ்தர் நில அளவீடுகள், புவிசார் நில அளவீடுகள், ஆகிய 08 வகையான நில அளவீடுகளின் கீழ் காணப்படுகின்ற உப நில அளவீட்டு வகைகளுக்காக 2007 மே 12 ஆந் திகதிய 2007/06 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் 2007 யூலை 01 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தும் வகையில் ஒரு நில அளவையாளரின் மாதாந்த வேலை அளவு (Norms) தீர்மானிக்கப்பட்டிருந்தது. 17 ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட இந்த மாதாந்த வேலை அளவு 2024 ஆம் ஆண்டு வரையும் மாற்றமின்றிக் காணப்பட்டது. 2021 பெப்ரவரி 25 ஆந் திகதிய 02/2021 ஆம் இலக்க வெளிககள சபை சுற்றறிக்கையின் மூலம் 2021 மார்ச் 01 ஆந் திகதியிலிருந்து இந்த மாதாந்த வேலை அளவினைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தும் 2021 மார்ச் 17 ஆந் திகதிய 2/3/03/06 ஆம இலக்க அமைச்சு செயலாளரின் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டதானது அரசாங்கத்தின் நில அளவையானளர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என தெரிவித்துள்ளதனால் மேற்கூறிய சுற்றறிக்கையினை மீண்டும் தெரியப்படுத்தும் வரை கைவிடுமாறாகும். மேற்கூறிய கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு 2021 மார்ச் 19 ஆந் திகதிய 02/2021(i) ஆம் இலக்க களச் சபை சுற்றறிக்கையின் மூலம் 02/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையினை மீண்டும் தெரியப்படுத்தும் வரை கைவிடப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டில் நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 25,549,800 பெறுமதியான 02 ட்ரோன்கள் அன்பளிப்பாக | மாதாந்த வேலை அளவுகளை மீளாய்வு செய்து திருத்தம் செய்ததன் பின்னர் அறிக்கை காணி அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் உரிய மாதாந்த வேலை அளவுகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு முன்னணி தொழில்நுட்ப திணைக்களமாக உலகத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் அமைதியாக செயற்படும் போது நவீன உபகரணங்களை கொள்வனவு செய்தலானது அத்தியவசியமான ஒரு விடயம் ஆனதுடன் தொழில்நுட்ப நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் காணி விலைகள் அதிகரித்து செல்வதனால் சரியான தன்மையை அளவீடு செய்வதற்காக ஒரு அத்தியவசியமான விடயம் ஆனதுடன் மாதாந்த இலக்குகள் அதிகரிக்கும் போது இதற்கு மேலதிகமாக நிகழ்காலத்தில் காணப்படுகின்ற காணிப் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்து செயல்முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதனால் அவ்வாறான விடயங்கள் ஒரு தடையாக உள்ளது என மேலும் தெரிவிக்கிறேன். | விதிமுறைகளை (Norms) அளவீட்டு நுட்ப முறைகள் மற்றும் உபகரணங்களின் தொழில்நுட்ப மேம்பாடுகளுடன் நிகழ்காலத்திற்கு பொருத்தமான வகையில் மீளாய்வு செய்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

கிடைத்துள்ளதுடன் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை நவீன நில அளவை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 207 மில்லியன் பணமும் செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் நில அளவை நுட்பங்களை பயன்படுத்துவதோடு திணைக்களத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒரு நில அளவையாளருக்கு் மாதாந்த வேலை அளவினை நிகழ்காலத்திற்கு பொருந்தும் வகையில் மீளாய்வு செய்யாது முன்னர் தோற்றுவிக்கப்பட்ட விதிமுறைகளே தொடர்ந்தும் நிறைவேற்றப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

<table>
<tr><th></th><th>கணக்காய்வு அவதானிப்புக்கள்</th><th>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</th><th>சிபாரிசுகள்</th></tr>
<tr><td>(அ)</td><td>2024 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 வகையான நில அளவைகளின் கீழ் கிடைத்துள்ள முழு நில அளவை வேண்டுதல்களின் எண்ணிகை 139,668 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்த எண்ணிக்கை 106,173 ஆகும். அதற்கிணங்க அத்திகதியில் பூர்த்திசெய்யப்படாத எண்ணிக்கை 33,495 அல்லது 24 சதவீதமாகும். அந்த பூரணப்படுத்தப்படாத நில அளவை வேண்டுதல்கள் தொடர்பான கால தாமதங்கள் பின்வருமாறாகும்.
<table>
<tr><th>நில அளவை வேண்டுதல்கள் கிடைத்த ஆண்டு</th><th>பூர்த்தி செய்யப்படாத நில அளவை வேண்டுதல்களின் எண்ணிக்கை</th><th>தாமதித்த காலம் ஆண்டுகள்</th></tr>
<tr><td>2020 மற்றும் அதற்கு முன்னர்</td><td>9,708</td><td>04 இற்கு மேல்</td></tr>
<tr><td>2021</td><td>4,133</td><td>03 இற்கு மேல்</td></tr>
<tr><td>2022</td><td>4,995</td><td>02 இற்கு மேல்</td></tr>
<tr><td>2023</td><td>6,132</td><td>01 இற்கு மேல்</td></tr>
<tr><td>2024</td><td>8,527</td><td>01 இற்கு குறைய</td></tr>
</table>
</td><td>அரசாங்கத்தில் கடந்த ஆண்டுகளில் காணப்பட்ட கொள்கைரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் அரசாங்க சேவைக்காக சேர்த்துக்கொள்ளுதல் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை, அரசாங்கத்தில் 850 நில அளவையாளர்கள் இருக்க வேண்டிய போதிலும் தற்பொழுது அந்த எண்ணிக்கை 550 இற்கு அண்மித்த அளவாகும். அவ்வாறே வருடாந்தம் நிறைவேற்ற முடியாத அளவினைவிட அதிகமாக நில அளவை வேண்டுதலகள் கிடைத்தமையும் திணைக்களத்திடம் உள்ள வாகனங்களில் அதிகமானவை 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையானவை என்பதனால் அடிக்கடி திருத்தம் செய்ய வேண்டி ஏற்படுவதனால் வெளிக்கள நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுதல், அரசாங்கத்தின் அவசர சுவீகரிப்புக்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய</td><td>நில அளவை வேண்டுதல்களை நிறைவேற்றும் செயற்திறனை அதிகரித்தல் வேண்டும்.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | ------------- <br> மொதததம் 33,495 <br> -------------- | நில அளவைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டி ஏற்படுகின்றது. நீதிமன்ற கமிசன் பத்திரங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செல்லும் போது அவற்றில் குறிப்பிட்ட ஆவணங்களை வழங்குதல் தாமதமடைதல் முதலிய விடயங்களின் அடிப்படையில் நில அளவை வேலைகள் தாமதமடைதல் மற்றும் அதற்கிணங்க நில அளவை வேண்டுதல்கள் ஒன்று சேர்தல் இடம்பெறும். | |
| (ஆ) | குருனாகல் மாவட்ட நில அளவை அலுவலகத்திற்கு கிடைத்துள்ள 58 நில அளவை வேண்டுதல்களுக்கான முழு நில அளவை கட்டணமாக 2015 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 5,317,151 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தும் இந்த நில அளவை வேண்டுதல்களுக்காக கணக்காய்வுத் திகதியான 2024 ஒக்தோபர் 28 ஆந் திகதி வரை 334 நாட்களிலிருந்து 3,397 நாட்கள் வரையான கால வீச்சிலான காலதாமதம் ஏற்பட்டிருந்தும் உரிய நில அளவை நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்படவில்லை. இந்த நில அளவை வேண்டுதல்கள் 33 எல்லைக்கல் நில அளவைகளையும், 03 நாளாவித நில அளவைகளையும், 04 சுவீகரித்தல் நில அளவைகளையும் 18 கொமிசன் நில அளவைகளையும் உள்ளடக்கியுள்ளது என SRIMS முறைமையை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. | மேலெயுள்ள பதில் இதற்கு தொடர்புபட்டதாகும். | கிடைக்கின்ற நில அளவை வேண்டுதல்களை துரிதமாக நிறைவேற்றுதல வேண்டும். |

**4.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் முன்னுரிமைச் செயற்பாாக திணைக்களத்தின் இலங்கை காணித் தகவல் சேவை முறைமை செயற்திட்டம் எதுவித செயல்முன்னேற்றத்தினையும் அடைந்து கொண்டிருக்காததுடன் கடனை மீள்கட்டமைப்புச் செய்யும் செயல்முறைமையின் பெறுபேறாக இச்செயற்திட்டம் தொடர்பான தொடக்க | 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே ஆரம்பிப்பதற்கு இத்திணைக்களத்தின் ஆளணியினர் ஆயத்தமாக இருநதும வெளிநாட்டுக் கடன் நிதி அங்கீகரிக்காமையின் அடிப்படையில் இச்செயற்திட்டத்தினை | எதிர்பார்த்த செயற்பாடுகள் நிறைவேற்றப்படாதிருக்கையில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாது 2022, 2023, 2024 ஆகிய ஆண்டுகளின் போது பரீட்சிப்பின் மூலம் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அமுல்ப்படுத்துதல் நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி அலுவலக வளவினை தயார்படுத்துதல் முடிவுறுத்தப்பட்டுள்ளது. அசசெயற்திட்டத்திற்காக எதிர்காலத்தில் வெளிநாட்டு கடனை பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் இருப்பதுடன் வெளிநாட்டுக் கடனைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படும். | |
| (ஆ) | திணைக்களத்தின் நில அளவை நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தக்கூடிய தொடர்ச்சியாக செயற்படுத்தப்படுகின்ற புவிசார் நில அளவை கட்டுப்பாட்டு முறைமையானது (SLCORS net) மேல் மாகாணத்தை உள்ளடக்கும் வகையில் 06 இடங்களில் மாத்திரம் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரை ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் ஸ்தாபிக்கப்பட வேண்டிய மிகுதியான 34 முறைமைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடு இல்லாததன் காரணமாக இச்செயற்பாடு மேற்கொள்ளப்படாததுடன் இந்த ஆண்டின் போது முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் 34 கட்டுப்பாடுகளை ஸ்தாபிப்பதற்காக ரூபா 170 மில்லியன் பிம்சவிய நிதியின் மூலம் ஒதுக்கீடு செய்து தொடக்க செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நில அளவை நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்காக செய்ய வேண்டிய செயற்பாடுகளை தாமதமின்றி நிறைவேற்றுதல் வேண்டும். |
| (இ) | வெவ்கம் புபுதுவ செயற்திட்டத்தின் கீழ் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் வேலை முடிவடையாத 65 நில அளவைகள் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் செயற்திட்டம் முடிவடைந்ததனால் செயற்திட்ட காலத்திற்குள் உரிய நில அளவை செயற்பாடுகளை முடிவுறுத்துவது தொடர்பாக நில அளவை திணைக்களத்தின் அனுராபுர அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. உரிய நில அளவை நடவடிக்கை ஒப்படைக்கப்பட்ட நில அளவையாளர்களின் செயலாற்றலினை மதிப்பீடு செய்யும் போது நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வேலைகள் முடிவடைந்திருக்காத நில அளவை நடவடிக்கைகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | வெவ்கம் புபுதுவ நில அளவையானது அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களால் மேற்கொள்ளப்படுவதுடன் அவர்களின் செயல்முன்னேற்றம் மாதாந்தம் Google பத்திரத்தில் நாளதுவரையாக்கப்படுகின்றது. வெவ்கம் புபுதுவ செயலமர்வுகளை நடாத்தும் போது நில அளவை நடவடிக்கைகளை முடியுமான அளவுக்கு விரைவாக பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயற்த்திட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேணடும். |

## 4.4 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டிக் ரோகவையின் 4.2.1(அ) பிரிவின் பிரகாரம் பெறுகை மேற்கொள்ளும் நிறுவனத்தினால் பிரதான பெறுகைத் திட்டத்தினை தயாரித்து அதன் 4.2.1(ஆ) பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் காலத்திற்கு எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகளை பெறுகைத் திட்டத்தில் பட்டியல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்காக அவ்வாறான பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டில் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சற்றறிக்கையின் 04 ஆம் பந்தியில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அடுத்துவரும் ஆண்டின் மீண்டுவரும் மற்றும் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் நடைமுறை ஆண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு மன்னர் தயாரித்து அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தைப் பெற்று அதன் பிரதியை தேசிய பெறுகை ஆணைக்குழு, கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அரசாங்க நிதித் திணைக்களம் என்பவற்றிகு அனுப்பிவைக்க வேண்டும் என காட்டப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரதி தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்கும் அரசாங்க நிதித் திணைக்களத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் தொடக்க 04 மாதங்களுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டிற்காக தயாரித்த பெறுகைத்திட்டம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதன் பிரதியை தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்கு, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மற்றும் அரசாங்க நிதி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நிர்ணயிககப்பட்ட திகதிக்குள் பெறுகைத் திட்டம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | குளியாப்பிட்டி கனதுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள பிராந்திய நில அளவை அலுவலகத்தின் 48 ஆம் இலக்க பெரசவி முகாமினை திருத்தம் செய்வதற்காக 2022 ஆம் ஆண்டிலிருந்து மதிப்பீட்டினைத் தயாரித்து அதற்காக பெறுகை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நிதி எற்பாடு மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக இப்பெறுகையானது அத்திவாரம் மற்றும் சுவர் கட்டுதல், சுவரினைப் பூசுதல், யன்னல் நிலைவைத்தல் ஆகிய வேலைகளைப் பூர்த்தி செய்தல்களாக 02 கட்டங்களில் | 2021/2022 ஆண்டுகளில் அப்போது காணப்பட்ட கொரோனா தொற்றுநோய், எரிபொருள் மற்றும் பொருளாதார பிரச்சினையை முன்னிட்டு குளியாப்பிட்டி மற்றும் அதற்கு அருகாமையிலுள்ள பிரதேசங்களிலிருந்து கிடைத்த அதிக அளவிலான நில அளவை வேண்டுதல்களை | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகள் தொடர்பான அங்கீகாரங்களின் அடிப்படையில் செயற்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 2,908,167 தொகைக்கு பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டதன் பின்னர் இன்னும் 02 கட்டங்களின் கீழ் 02 மதிப்பீடுகளையும் ஒன்று சேர்த்தலின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா 8,335,871 வரை அதிகரித்திருந்தது. நிகவெரடியாவில் அமைந்துள்ள பிராந்திய நில அளவை அலுவலகம் 2023 ஆம் ஆண்டிலிருந்து அதனை ஸ்தாபிக்கும் குறிக்கோளில் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தும் 2024 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரை அதனை முழுமையாக பூர்த்திசெய்து அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றும் போது உருவாகிய சிக்கல்கள் தோடர்பாக கவனித்து நிக்கவெரடிய பிராந்திய நில அளவை அலுவலகத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற குளியாபிட்டி பிரதேசத்தில் ஒரு அலுவலகத்தினை ஸ்தாபிப்பதன் மூலம் பிங்கிரிய, கொபேய்கன, பண்டுவஸ்நுவர (கிழக்கு), பண்டுவஸ்நுவர (மேற்கு), குளியாபிட்டி (கிழக்கு), குளியாபிடிய (மேற்கு), பன்னல, உடுபத்தாவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள பொதுமக்களுக்கு பரவலாக சேவைகளை வழங்குவதற்கு இந்த அலுவலகத்தினை நிர்மாணிப்பதன் மூலம் இயலுமை கிடைத்துள்ளது. | |

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 4.5.1 வாகனக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மோட்டார வாகன போக்குவரத்து திணைக்களத்திடம் கோரப்பட்ட தகவல்களுக்கு இணங்க திணைக்களத்தின் பெயரில் 384 வாகனங்கள் காணப்பட்டிருந்தும் திணைக்களத்தின் போக்குவரத்து பிரிவின் தகவல்களின் பிரகாரம் அந்த எண்ணிக்கை 326 ஆகும். அதற்கிணங்க 96 வாகனங்கள் திணைக்களத்தின் வாகன பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவற்றில் 04 வாகனங்கள் 2006 ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட வாகனங்கள் ஆனதுடன் மிகுதி வாகனங்கள் 1957 இற்கும் 1996 இற்கும் இடைப்பட்ட காலதில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களாகும். அது தொடர்பாக முறைப்படியாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி சரிசெய்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு இணங்க எங்கள் திணைக்களத்திடம் காணப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை 384 என குறிப்பிடப்படுவதனால் பின்வருமாறு எங்களிடம் காணப்படாத வாகனங்கள் தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்று இந்நிலைமையை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சுட்டிக்காட்டப்பட்டுள்ள 106 வாகனப் பட்டியலில் 96 வாகனங்களின் தகவல்கள் எதனைம் தேடிக்கண்டுபிடிக்க முடியாதுள்ளது. அதுபற்றி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். அவர்களின் தரவு முறைமைகளிலிருந்து | வாகனங்கள் தொடர்பான தகவல்களை முறையாக நாதுவரையாக்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அவற்றினை நீக்குவதற்கு எடுக்ககூடிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த வாகனங்கள் சம்பந்தமான கோவைகள் மிகவும் பழமையானவை என்பதனால் ஆவணக்காப்பகம் உள்ளடங்கலாக பரீட்சிக்க வேண்டியிருப்பதனால் சரிசெய்வதற்கு தாமதம் ஏற்படும் என மேலும் தெரிவிக்கிறேன். | |

### 4.5.2 காணி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நில அளவைத் திணைக்களத்திடம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,579,529,500 பெறுமதியான 125 காணித்துண்டுகள் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 1,286,302,500 பெறுமதியான 66 காணித்துண்டுகளுக்குரிய காணிகளை வழங்கும் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | திணைக்களத்திடம் காணப்படுகின்ற காணித் தகவல்களையும் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் காணப்படுகின்ற தகவல்களையும் ஒப்பிட்டுப் பார்த்து அவை தொடர்பாக கணக்காய்விற்கு அறிக்கை யிடுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | அனைத்து காணிகளுக்குமாக காணிகளை வழங்கும் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும். |
| (ஆ) திணைக்களத்தின் 139 காணித்துண்டுகள் தொடர்பாக 09 மாகாணங்களின் கீழ் 09 பொழிப்புகளுடன் அரசாங்க திணைக்களங்களுக்கு காணிகளை வழங்குவது தொடர்பான 79 சான்றிதழ்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் 125 காணித்துண்டுகள் குறிப்பிடப்பட்டிருந்தன. திணைக்கத்திடம் உள்ள காணிகள் தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட சரியான ஒரு பட்டியல் தயாரிக்கப்படவில்லை எனகணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மேலேயுள்ள பதில் இதற்கு தொடர்புபட்டதாகும். | காணிகள் தொடர்பாக நாளதுவரையாக்கிய சரியான ஒரு பட்டியல் பேணப்படுதல் வேண்டும். |
| (இ) மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்து அனுப்பப்பட்ட போதிலும் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் கணக்குகளில் உள்ளடக்கி கொள்ளுவதற்கான ஒரு கடிதம் இல்லாத 08 காணித் துண்டுகளின் முழுப் பெறுமதி ரூபா 143,736,000 தொகை சிகாஸ் அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. எனினும் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் கணக்குகளில் உள்ளடக்கப்படுவதற்கான ஒரு | மேலேயுள்ள பதில் இதற்கு தொடர்புபட்டதாகும். | மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்து அனுப்பப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் காணிகளின் பெறுமதி கணக்குகளுக்கு |

| | | |
|---|---|---|
| கடிதம் இல்லாது மதிப்பீட்டுத் திணைக்களத்தின் கடிதத்தினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ரூபா 202,745,000 பெறுமதியான 05 காணித்துண்டுகளின் பெறுமதி சிகாஸ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க காணிகளின் பெறுமதியை சிகாஸ் அறிக்கையில் உள்ளடக்கும் ஒரு நிரந்தரமான நடைமுறை இல்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | எடுத்துக்கொள்ள ப்படுதல் வேண்டும். |

### 4.5.3 நில அளவை உபகரணங்களின் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைமை அலுவலகத்திலிருந்து பெல்வத்த பிராந்திய நில அளவை அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த Stonex - DL 10077 ஆம் இலக்க உபகரணம் திசையினை சரியாகக் காட்டாமை சம்பந்தமான பிரச்சினையின் அடிப்படையில் இந்த உபகரணத்தை சேவை செய்வதற்கும் திருத்தம் செய்வதற்கும் 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி தலைமை அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு மீண்டும் 2024 யூலை 17 ஆந் திகதி பிராந்திய அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும் உரிய கோளாறு இன்னும் கணாப்படுவதனால் 2023 ஏப்ரல் 18 ஆந் திகதியின் பின்னர் கணக்காய்வுத் திகதியான 2024 செப்தெம்பர 11 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளாது 01 ஆண்டு 05 மாதங்களுககு அண்மித்த காலம் விளைவற்றுக் கணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | இந்த உபகரணத்திற்கு சேவை செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் செய்யப்பட்டிருந்தும் சரியான தீசையை காட்டுதல் சம்பந்தமான பிரச்சினை இன்னும் காணப்படுவதனால் வெளிக்கள நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதில்லை. அக்கோளாரினை சரிசெய்வதற்காக மீண்டும் உபகரணத்தை கட்டிடப் பிரிவில் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நில அளவை உபகரணங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை உடனடியாக சரிசெய்து நிலஅளவை நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 நவம்பர் 01 ஆந் திகதி சேவை செய்வதற்காக DL 10115 ஆம் இலக்க உபகரணம் தலைமை அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2025 ஆம் ஆண்டின் இந்த அறிக்கைத் திகதி வரை சேவை செய்து மீண்டும் பெல்வத்த பிராந்திய நில அளவை அலுவலகத்திற்கு ஒப்படைத்திருக்கவில்லை. | இந்த உபகரணத்தை சேவை செய்வதற்காக 2022-11-01 ஆந் திகதி தலைமை அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இன்றுவரை அதனை சேவை செய்யும் நடவடிக்கையானது உதிரிப் பாகங்களின் பற்றாக்குறையின் அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு முடியாதுள்ளது. மாற்று வழிகளை ஈடுபடுத்த அல்லது பாவனையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நில அளவை உபகரணங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை உடனடியாக சரிசெய்து நிலஅளவை நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக செய்தல் வேண்டும். |

## 4.6 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைவைத்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 880 இற்கு இணங்க பிணை வைப்பதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் சுயமாக கடமை நடவடிக்கைகளை நேர்மையாக நிறைவேற்றுகின்றார்கள் என்பதற்கு 612 ஆம் அத்தியாயமான அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணைவைக்க வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 2021 திசெம்பர் 20 ஆந் திகதிய 01./2021 ஆம் இலக்க நில அளவைத் திணைக்களத்தின் ஆளணி சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் பிணைவைத்தல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் 07 ஆம் பிரிவின் பிரகாரம் முதலாவது தவணைப் பணமாக ரூபா 2,000 மற்றும் மிகுதிப் பணத்தை 10 தவணைகளிலும் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தது. எனினும் இரண்டு உத்தியோகத்தர்கள் எந்தப் பிணையும் வைத்திருக்காததுடன் இருபது உத்தியோகத்தர்கள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை போதியளவு பிணை வைத்திருக்கவில்லை. | இது சம்பந்தமான நிகழ்கால நிலைமை தொடர்பாக விளக்கமளிப்பதனைப் போல 01/2021 ஆம் இலக்க ஆளணி சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் ஒரு தடவை உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசாங்க உத்தியோகத்தர் களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணைவைத்தல் வேண்டும். |

## 4.7 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | SRIMS முறைமையில் குறிப்பிட்ட தகவல்களுக்கு இணங்க அந்த வேண்டுதல்கள் பிராந்திய அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு நில அளவையாளருக்கு ஒப்படைப்பதறகு களுத்துறை மாவட்டத்தின் 96 நில அளவை வேண்டுதல்கள் தொடர்பாக 02 நாட்களிலிருந்து 1323 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தமை 55 நில அளவை வேண்டுதல்கள் தொடர்பாக நில அளவையாளர்களுக்கு உரிய ஒப்படைப்புக்கள் செய்த திகதி குறிப்பிப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே குருனாகல் மாவட்டத்தில் 51 நில அளவை வேண்டுதல்கள் தொடர்பாக அந்த வேண்டுதல்களை ஒரு நில | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நில அளவை வேண்டுதல்களின் வேலைகளை ஆரம்பிப்பதற்காக வெளிக்களத்திற்கு வழங்குதல் தாமதமடைகின்றது. அதாவது நில அளவை வேண்டுதல்களில் குறைபாடுகள் இருத்தல், மற்றும் அவை தொடர்பான நிறுவனங்களிடமிருந்து பதில் தாமதமடைதல், பணம் செலுத்த வேண்டிய நில அளவை கட்டணங்கள் | நில அளவை வேண்டுதல்கள் கிடைத்ததன் பின்னர் ஒரு நில அளவையாளருக் கு ஒப்படைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவையாளருக்கு ஒப்படைப்பதற்காக 04 நாட்களிலிருந்து 1914 நாட்கள் வரையான காலதாமதம் இடம்பெற்றிருந்ததுடன் மிகுதி 33 நில அளவை வேண்டுதல்கள் தொடர்பாக நில அளவையாளர்களுக்கு ஒப்படைத்த திகதி குறிப்பிடப்பட்டிருக்காததனால் அந்த வேண்டுதல்கள் இன்றுவரை நில அளவையாளருக்கு ஒப்படைக்கப்படாத வேண்டுதலா இல்லையாயின் ஒரு நில அளவையாளருக்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும் SRIMS முறைமையில் தகவல்களை உள்ளடக்கப்படாத வேண்டுதலா என்பதனை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | தெரியப்படுத்தியிருந்தும் உரிய நிறுவனங்களிடமிருந்து அவற்றினை செலுத்துதல் தாமதமடைதல் (நில அளவைக் கட்டணத்தை செலுத்தும் வரை துறைகளுக்கு வழங்குதல் இடம்பெறுவதில்லை), நீதிமன்ற நில அளவைகளின் போது ஆவணங்கள் வழங்கப்படாமை மற்றும் தேவையான ஆலோசனைகள் முறைப்படியாக வழங்கப்படாமை இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் கடிதங்களின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. அக்குறைபாடுகளை பூரணப்படுத்தியதன் பின்னர் இந்த நில அளவை வேண்டுதல்கள் வெளிக்களத்திற்கு வழங்கப்படுவதனால் இவ்வாறு அதிக அளவிலான கால இடைவெளி இடம்பெறுவதற்கு காரணமாகும். | |
| (ஆ) | லிகோ அச்சிடல் பிரிவு மற்றும் நாடாக்களை தயாரிப்பதற்காக தற்பொழுது காணப்படுகின்ற அச்சிடல் இயந்திரங்கள் மிகவும் பழமையானவை மற்றும் அதிக பெறுமதியை கொண்ட அதிக அளவான செயற்பாடுகளை நிறைவேற்றக்கூடியதான இயந்திரமானதுடன் Auto Print Crabtree மற்றும் Plate ஆகிய இயந்திரங்களை செயற்படுத்துவதற்காக ஊழியர்கள் இல்லாமையினால் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. 03 Color metal இயந்திரங்களில் 02 இயந்திரங்கள் மாத்திரம் ஒரு நேரத்துக்கு ஒரு இயந்திரமாக மாற்றி செயற்படுத்தப்படுகின்றது எனவும் மற்றைய இயந்திரத்தின் பகுதிகள் இந்த 02 இயந்திரங்களுக்கு தேவைப்படுகின்ற நேரத்தில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதுடன் Flat bed litho press இயந்திரம் மற்றும் German Gilatic இயந்திரமும் விளைவற்றுக் காணப்பட்டது. | போதியளவு ஊழியர்கள் இருக்கையில் இந்த உபகரணங்கள் சரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அதிக அளவிலான பெறுமதியைக் கொண்ட செயற்பாடுகளையும் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக ஊழியர்கள் குறைவடைதல் மற்றும் அதற்கு நேரொத்தாக ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறாமையால் இப்பிரச்சினை உருவாகியிருந்தது. தற்பொழுது தேவையான ஆட்சேர்ப்புக்கள் சம்பந்தமாக முகாமைத்துவ திணைக்களத்திற்கு பல சந்தர்ப்பங்களில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உபகரணங்களையும் ஒரு | போதியளவு எண்ணிக்கையான ஊழியர்களை சேர்த்துக்கொண்டு உபகரணங்களை சரியாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தடவையில் செயற்படுத்துவதற்கு போதியளவு மனித வளங்கள் இல்லாதிருந்தும் அவ்வப்போது செயற்படுத்தக்கூடிய வகையில் பயன்படுத்துவதற்கும் மற்றும் தேவையான சேவைகளை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிகளில் மேற்கொண்டு உபகரணங்களை சிறப்பாக பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.. | |
| (இ) | நில அளவைத் திணைக்களத்தின் செயற்பாடான வரை படத்தை அச்சிடும் நடவடிக்கையை மேம்படுத்தச் செய்வதற்காக புதிய தொழில்நுட்பத்திற்கு பொருந்தும் வகையில் நவீனமயப்படுத்துவதற்காக முறையான ஒரு வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் வரைபட சேகரிப்பினை அச்சிடும் நடவடிக்கை 2020 ஆம் ஆண்டின் பின்னர் 2024 நவம்பர் மாதம் இறுதி வரை இடம்பெற்றிருக்காததுடன் அதன் மூலம் திணைக்களத்திற்கு வருமானம் கிடைத்தல் இழக்கப்பட்டிருந்தது. | இந்த பாடசாலை வரைபட சேகரிப்பினை அச்சிடுவதற்காக வருடாந்தம் அமுல்ப்படுத்தப்படுகின்ற திட்டத்திற்கு இணங்க தேவையான அங்கீகாரம் தொடர்பாக தொடக்க நடவடிக்கைகள் செய்யப்பட்டிருந்தும் ஆளணியினர் பற்றாக்குறையின் காரணமாக அமுல்ப்படுத்துதல் தாமதமடைந்துள்ளது. தற்பொழுது பிரிவில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற 03 உத்தியொகத்தர்களின் சேவையை 3/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க தேவையான சிபாரிசுகள் மற்றும் அங்கீகாரத்தினை பெற்று ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவைக்கு சேர்த்து இச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | புதிய தொழில் நுட்பத்திற்கு பொருந்தும் வகையில் நடவடிக்கையை மேற்கொண்டு வருமானத்தை அதிகரித்தல் வேண்டும். |
| (ஈ) | பத்தேகம பிராந்திய அலுவலகத்தில் நில அளவை வெளிக்கள உதவியாளர்கள் ஒவ்வொரு மாதத்தின் போதும் வெளிக்கள கடமைகளில் ஈடுபடுகின்ற நாட்களின் எண்ணிக்கை தொடர்பாக மேற்கொண்ட தெரிவுப் பரீட்சிப்பின் போது 2024 ஆம் ஆண்டின் 09 மாத காலம் தொடர்பாக அவர்கள் வெளிக்கள கடமைகளில் | 2024 ஆம் அண்டில் நடைபெற்ற தொழில் சங்க நடவடிக்கைகள் தொடர்பாக வெளிக்கள நடவடிக்கைகளுக்கான கடமையின் நில அளவையாளர்களின் பங்களிப்பு ஒட்டுமொத்தமாக | நில அளவை வெளிக்க உதவியாளர்களை உச்ச அளவாக சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடுகின்ற நாட்களின் எண்ணிக்கை 18 சதவீதத்திலிருந்து 42 சதவீதம் வரை ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. மேலும் நில அளவை வெளிக்கள உதவி உத்தியோகத்தர்களும் ஒரு மாத்தில் வெளிக்கள கடமைக்காக ஈடுபடுத்தப்பட்டமை தொடர்பாக 2024 ஆம் ஆண்டில் 07 மாதத்ங்கள் மேற்கொண்ட தெரிவுப் பரீட்சிப்பின் போது சில உத்தியோகத்தர்கள் 01 நாளுக்கும் 16 நாட்களுக்கும் இடைப்பட்ட அளவில் கடமைகளில் ஈடபடுத்தப்பட்டிருந்ததுடன் சில உத்தியோகத்தர்கள் மாதத்தில் எந்த கடமையிலும் ஈடுபட்டிருக்கவில்லை. எல்பிடிய பிராந்திய நில அளவை அலுவலகத்தில் நில அளவை வெளிக்கள உதவியாளர்கள் வெளிக்கள கடமைகளில் ஈடுபட்ட நாட்களின் எண்ணிக்கை 40 சதவீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது எனவும் சில மாதங்களில் எந்த வெளிக்கள கடமையிலேனும் ஈடுபட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு நில அளவை வெளிக்கள உதவி உத்தியோகத்தரும் ஒரு மாதத்தில் வெளிக்கள கடமைக்காக ஈடுபட்டிருந்தமை தொடர்பாக சனவரி, பெப்ரவரி, மே, யூன் ஆகிய மாதங்களுக்காக மேற்கொண்ட தெரிவுப் பரீட்சிப்பின் போது சில உத்தியோகத்தர்கள் 01 நாளுக்கும் 17 நாட்களுக்கும் இடையிலான அளவில் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். அதற்கிணங்க நில அளவை வெளிக்கள பதவியில் ஊழியர்கள் பெரும்பாலும் குறைவாக சேவையில் ஈடுபடுகின்றார்கள் என அவதானிக்கப்பட்டது. | குறைவு என்பதனால் நில அளவை வெளிக்கள உதவியாளர்கள் வெளிக்கள கடமைகளில் ஈடுபடுகின்ற நாட்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. | |
| (உ) | நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனம் நில அளவை விஞ்ஞானம் தொடர்பான பட்டப் படிப்பினை கற்பதற்காக 2014 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான 08 ஆண்டுகள் காலத்திற்கு 02 பட்டப் படிப்பு கற்கை நெறிகளை நடாத்தி 104 பட்டதாரிகளை உருவாக்கியுள்ளதுடன் 2022 இலிருந்து 2026 வரையான 04 ஆண்டுகள் கற்கை நெறிக்காக 22 மாணவர்கள் ஆன மிகவும் குறைந்த எண்ணிக்கையானவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அதற்கிணங்க இந்த நிறுவனத்தின் வளங்கள் குறைவாக பயன்படுத்தப்படுகின்ற நிலைமை காணபப்பட்டது. | 1969 இன் 21 ஆம் இலக்க நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனத்தை ஸ்தாபிக்கும் அதிகாரச் சட்டத்தினை திருத்துவதற்காக புதிய அமைச்சரவையின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனத்திற்காக ஒரு புதிய கணக்கினை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேற்கூறிய | மாணவர்களின் அளவை அதிகரித்து வளங்களை உச்ச அளவில் பன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேவைப்பாட்டினை பூரணப்படுத்தியதன் பின்னர் வெளி விண்ணப்பதாரர்களுக்காகவும் இந்த நிறுவனத்தின் சேவைகளை வழங்குவதற்கு இயலுமை கிடைக்கும். பட்டப்படிப்பு கற்கை நெறிகளுக்கு மற்றும் குறுங்கால கற்கை நெறிகளுக்கு மேலதிகமாக நில அளவை திணைக்களத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுகின்ற நில அளவை விஞ்ஞான பட்டதாரிகளுக்கான 06 மாத பரிந்துரைத்தல் கற்கை நெறி, இலங்கை தொழில்நுட்ப சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான 02 ஆண்டுகள் டிப்ளோமா கற்கைநெறி மற்றும் புதிய நில அளவை விஞ்ஞான பட்டதாரிகளுக்கான 03 மாத பரிந்துரைத்தல் கற்கை நெறியும் நடாத்தப்படும். எனவே தற்பொழுது இந்த நிறுவனத்தின் வளங்கள் குறைந்த பயன்பாடின்றி பயன்படுத்தப்படுகின்றது. | |
| (ஊ) | நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனத்தில் 2022 - 2026 பட்டப்படிப்பு குழுவின் சேர்மானம் 08 ஏனைய பட்டதாரிகளையும் 14 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியிருந்ததுடன் இக்கற்கை நெறிக்கு தெரிவு செய்யும் போது ஏனைய பட்டதாரிகளின் அளவினை தீர்மானிக்கும் ஒரு நிரந்தர நடைமுறை இருந்ததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போட்டிப் பரீட்சினையின் மூலம் தெரிவு செய்யப்படுகின்றார்கள் என 2021 யூலை 02 ஆந் திகதிய 16/2021 ஆம் இலக்க நில அளவைத் திணைக்கள ஆளணி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படுகின்ற அளவினைத் தீர்மானிப்பதற்காக ஒரு நிரந்தர நடைமுறை அல்லது எழுத்துமூல சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கபபடவில்லை. | மேலேயுள்ள பதில் இதனுடன் தொடர்புபட்டதாகும். | தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அளவை தீர்மானிப்பதற்காக ஒரு நிரந்தர நடைமுறையை அறிமுப்படுத்துதல் வேண்டும். |
| (எ) | நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனம் 2022 ஆம் ஆண்டிலிருந்து 2026 | மேலேயுள்ள பதில் இதனுடன் தொடர்புபட்டதாகும். | வளங்களை உச்ச அளவு |

ஆம் ஆண்டு வரையான நான்கு ஆண்டுகள் பட்டப் படிப்பு கற்கைநெறியின் கீழ் 22 மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுவதுடன் 14 குறுங்கால கற்கை நெறிகளும் 38 ஒரு நாள் செயலமர்வுகளும் மாத்திரம் 2024 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்தன. இந்த நிறுவனம் 121 பல்வேறு கட்டிட அம்சங்களை உள்ளடக்கி 61 ஏக்கர் நிலப் பகுதியில் மிகவும் பாரிய பௌதீக வளங்களுடன் தோற்றுவிக்கப்பட்டிருந்தும் அவற்றின் பயன்பாடு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

வினைத்திறனுடன் பயன்படுத்துதல் வேண்டும்.

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்டது.** | **உள்ள படியானவை** | **வெற்றிடங்கள்** |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 1,144 | 834 | 310 |
| மூன்றாம் மட்டம் | 82 | 26 | 56 |
| நாடளாவிய மட்டம் | 1,372 | 1,044 | 328 |
| ஆரம்ப மட்டம் | 4,890 | 3,076 | 1,814 |
| அமையம் | 0 | 0 | 0 |
| தற்காலிகம் (பல்நோக்கு) | 0 | 0 | 0 |
| ஒப்பந்தம் | 0 | 0 | 0 |
| மொத்தம் | 7,488 | 4,980 | 2,508 |

அங்கீகரித்த ஆளணிக்கு நேரொத்த வகையில் சிரேஷ்ட மட்டத்தின் 27 சதவீதம், மூன்றாம் மட்டத்தில் 68 சதவீதம், நாடளாவிய மட்டத்தில் 24 சதவீதம், ஆரம்ப மட்டத்தில் 37 சதவீதம் என்பனவாக ஒட்டுமொத்த ஆளணியினர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 2,508 ஆகும். அவ்வாறே ஒட்டு மொத்த ஆளணியினர் வெற்றிடம் 33 சதவீதமாக காணப்பட்டிருந்தும் வரைபு செயலாற்றல் அறிக்கைக்கு இணங்க வருடாந்த நில அளவை இலக்கு 114 சதவீதத்தினை பெற்றுக்கொண்டுள்ளதனால் வருடாந்த நில அளவை இலக்கு மற்றும் வெற்றிடங்களை மீண்டும் திருத்தம் செய்யவேண்டும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**

திணைக்களத்தில் 2020 ஆம் ஆண்டிலிருந்தே அரசாங்கத்தின் கொள்கை தீர்மானத்தின் அடிப்படையில் ஆட்சேரப்பு நிறுத்தப்பட்டிருந்ததனால் அனைத்து தரங்களிலும் பதவி வெற்றிடங்கள் உருவாகியுள்ளது. இந்த சேர்த்துக்கொள்ளக்கூடிய வெற்றிடமான பதவிகளுக்காக தேவையான உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரத்தினை வழங்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கும் பிரதம மந்திரி அலுவலகத்தின் ஆட்சேர்ப்பு குழுவிற்கும் தற்பொழுது தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஆளணியை மீளாய்வு செய்வது தொடர்பாக முழுமையான விபரமான அறிக்கை இதனுடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அங்கீகரித்த ஒட்டுமொத்த ஆளணிக்கு நேரொத்த வகையில் 33 சதவீத வெற்றிடம் காணப்பட்டிருந்தும் உள்ளபடியான ஆளணி

**சிபாரிசுகள்**

வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கும் போது ஆளணியை திருத்தம் செய்து வருடாந்த நில அளவை இலக்குகளையும் திருத்தம் செய்தல் வேண்டும்.

பதவிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த நில அளவை இலக்கு தயாரித்து செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டதனால் மற்றும் உள்ளபடியான ஆளணியின் அர்ப்பணிப்பினால் எதிர்பார்த்த வருடாந்த நில அளவை இலக்கினை மிகைத்து 114 சதவீத செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டுள்ளது என அவதானிக்கிறேன். இவ்வாறு வழங்கிய இலக்கின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்முன்னேற்றத்தை சதவீதமாக காட்டுதல் மேற்கொள்ளப்பட்டதானது. நில அளவையாளர் சேவையில் உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்காக மாத்திரமாகும்.